மாலை முரசு

பக்கங்கள் 16

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 13 செவ்வாய்க்கிழமை 31.10.2023 அதிர்வு 92

## நெடுந்தீவில் வீடொன்றில் இளைஞரின் சடலம் மீட்பு!

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம் – நெடுந்தீவு பகுதியில் வீடொன்றில் தனிமையில் இருந்த இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த குணராசா தனுஷன் (வயது 25) எனும் 04

### பிக்குகள் வெறியாட்டம்; அரசோ பாராமுகம்

# தீர்வு முயற்சி இழுத்தடிப்பு

### சர்வதேச சமூகத்தின் கடும் அழுத்தம் வேண்டும்

### ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக் குழுவினரிடம் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வலியுறுத்து





*- சீ.ஏ.தமிழ்மாறன் -*

"வடக்கு - கிழக்கில் பௌத்த பிக்குகள், தமிழ் மக்களுக்கும், அவர்களின் பிரதிநிதிகளுக்கும் தொடர்ந்து அச்சுறுத்தல்களை விடுத்து வருகின்றனர். அவர்கள் இனவாதத்தைக் கக்கி மதவாதத்தைத் தூண்டி வருகின்றனர். தமிழர் தாயகத்தில் என்றுமில்லாதவாறு பௌத்த மயமாக்கல் தற்போது தீவிரமடைந்துள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரச தரப்பினரிடம் நாம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை."

- இவ்வாறு ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக் குழுவிடம் நேரில் எடுத்துரைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

"அரசியல் தீர்வை எட்டும் முயற்சி இழுத்தடிக்கின்றது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இன்னமும் நீக்கப்படவில்லை. இந்த விடயங்களில் இலங்கை அரசு மீது சர்வதேச சமூகத்தின் கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும்" - என்றும் அவர் வலியுறுத்தினார். 04

## நாவலடி கடற்கரையில் வயோதிபரின் சடலம்!



-மட்டக்களப்பு நிருபர்-

மட்டக்களப்பு, நாவலடி கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் வயோதிபர் ஒருவரின் 04

## அம்பிட்டிய தேரர் விவகாரம்: பிள்ளையான் - மனோ பேச்சு





அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் விவகாரம் குறித்து மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தவிசாளர் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுடன் (பிள்ளையான்) நேரடியாக இன்று நான் உரையாடியுள்ளேன் என்று 04

### கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி:

## நவம்பர் 20 ஆரம்பிக்கப்படும் அகழ்வுப் பணி தொடருமாம்

- சண்முகம் தவசீலன் -



கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது என்று 04

## டயனாவுக்கு எதிரான மனு இன்று தள்ளுபடி



இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்துச் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த மனுவை இன்று தள்ளுபடி செய்துள்ளது.

# நகர அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தித் திட்டம் வர்த்தமானியில்

29 அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது என்று நகர அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பான பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய மேலும் சில அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டவுள்ளன.

அந்த வகையில், மஹவ, மாத்தறை, ஹிக்கடுவ, அம்பலாங்கொட, சிதாவக, சிதாவகபுர, பாணந்துறை, ஹொரண, வத்தளை, ஜா-எல, கம்பஹா, கட்டான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் மஹர, கெக்கிராவ, தலாவ, மாவனல்லை, குண்டசாலை, நாவலப்பிட்டி, கம்பளை, ஹட்டன், வெலிமடை, பண்டாரவளை, வெல்லவாய அம்பாறை அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவை தொடர்பிலேயே வர்த்தமானியில் வெளியிடப்பட உள்ளது.

திருகோணமலை அபிவிருத்தித் திட்டம், எல்ல அபிவிருத்தித் திட்டம், ஹம்பாந்தோட்டை அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஹிக்கடுவ அபிவிருத்தித் திட்டம் என்பனவும் வர்த்தமானியில் வெளியிடப்பட உள்ளன என்று நகர அபி விருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவற்றில் எல்ல அபிவிருத்தித் திட்டம் தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

# வீதியை விட்டு விலகிய தனியார் பேருந்து விபத்து!

(வடமராட்சி நிருபர்)

யாழ். கொடிகாமம் – பருத்தித்துறை வீதியில் பயணித்த தனியார் பேருந்து பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இன்று(31) காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொடிகாமம் – புலோலி பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது பேருந்து கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது என்று தெரியவந்துள்ளது.

இதையடுத்துப் பேருந்தில் சிக்கிய பயணிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் அப்பகுதி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# மர்மமான முறையில் உயிரிழந்த நபரின் நிர்வாணச் சடலம் மீட்பு!

மாரவில தெமட்டபிட்டிய ஆரம்ப பாடசாலைக்கு அருகில் மர்மமான முறையில் உயிரிழந்த நபரின் நிர்வாண சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இன்று (31) காலை கிடைத்த தொலைபேசி அழைப்பிற்கமைய, மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது சடலம் மீட்கப்பட்டது என்று மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வென்னப்புவ – மேற்கு தும்மலதெனிய பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

தச்சுத் தொழிலாளியான அந்த நபர் கடந்த காலங்களில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சடலம் இருந்த இடத்துக்கு அருகில் தேவாலய மைதானத்தில் பெண்கள் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிள் மற்றும் சில ஆடைகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

மோட்டார் சைக்கிள் மற்றும் ஆடைகள் உயிரிழந்த நபருடையதாக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவரின் தலையில் இருந்து இரத்தம் வெளியேறியிருந்ததாகவும் இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அதிகரித்த விலையில் அரிசி விற்பனை செய்தால் தண்டம்!



அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை விட அதிகரித்த விலையில் அரிசியை விற் பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் உடனடியாக அறிவிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை பொது மக்களைக் கேட்டுள்ளது.

அவ்வாறானவர்கள் தொடர்பில் 1977 என்ற தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும் என்று அதிகார சபை தெரிவித்துள்ளது.

அரசு வெள்ளை மற்றும் சிவப்பு நாட்டரிசி ஒரு கிலோ 220 ரூபாவுக்கும், கீரி சம்பா ஒரு கிலோ 260 ரூபாவுக்கும், சம்பா ஒரு கிலோ 230 ரூபாவுக்கும், வெள்ளை மற்றும் சிவப்புப் பச்சை அரிசி ஒரு கிலோ 210 ரூபாவுக்கும் விற்பனை செய்ய வேண்டும் என்று கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயித்துள்ளது.

கட்டுப்பாட்டு விலையை விட அதிகரித்த விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதிகரித்த விலையில் அரிசி விற்பனை செய்தால் ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

# சீனாவில் இருந்து மீன் இறக்குவதை உடனடியாகத் தடுத்து நிறுத்துங்கள்!

## வடமராட்சி வடக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவிப்பு

(வடமராட்சி நிருபர்)

சீனாவில் இருந்து மீன்களை இறக்குமதி செய்வதை உடனடியாக நிறுத்துமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சாமசப் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சாமசத்தின் பொதுக் கூட்டம் சமாச அலுவலகத்தில் நேற்று (30) திங்கட்கிழமை இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தின் போது மேற்படித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

தடைசெய்யப்பட்ட சட்டவிரோத தொழில் முறைகள் மற்றும் எல்லை தாண்டிய இந்திய மீனவர்களது மீன்பிடி நடவடிக்கை உள்ளிட்ட பிரச்சினைகளால் வடக்கு மாகாண கடல்வளங்கள் அழிக்கப் பட்டு வருகின்றன. மீனவர்களது வாழ்வாதாரமும்முற்றாகபாதிக்கப்பட்டுள்ளது.




இவ்வாறான நிலையில் சீனாவில் இருந்து மீன்களை இறக்குமதி செய்வது மீனவ சமூகத்தைப் பெரும் இன்னல்களுக்கு உள்ளாக்குவதுடன் பேரழிவுக்குள் தள்ளும் விதமாகவே அமைகிறது.

ஆகவே, இலங்கை மீனவ சமூகத்தை பேரழிவில் இருந்து காப்பாற்றும் வகையில் சீனாவில் இருந்து மீன்களை இறக்குமதி செய்யும் செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கிறோம். மீன்கள் இறக்குமதி செய்வதை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. குறித்த தீர்மானத்தை கடற்றொழில் அமைச்சரிடம் நேரில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.–என்று தெரிவிக்கப்பட்டது.

# பிரமாண்டமான முறையில் யாழ்ப்பாணத்தில் பேய்வீடு!

யாழ்ப்பாணத்தில் மிக பிரமாண்டமான முறையில் பேய் வீடு ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. அந்த வீட்டினுள் சென்று திகில் அனுபவங்களை பெறத் தயாராகுமாறும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

வடமாகாணத்தில் முதல் தடவையாக யாழ்ப்பணத்தில், "யுசவளைவஉ நுளநவெ ஆயயெபநஅநவெ" ஏற்பாட்டில் திகில் வீடு ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. அந்த வீட்டினுள் சென்று திகில் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

யாழ். நகருக்கு அருகில் ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயத்துக்கு அருகிலையே இந்தத் திகில் வீடு உருவாக்கப்பட்டு வருகிறது.

அந்த வீட்டினுள் எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரையிலான மூன்று தினங்களும் மாலை 06 மணி தொடக்கம் இரவு 11 மணி வரையில் அங்கு செல்ல முடியும்.

ஒலி , ஒளி அமைப்புக்களுடன் மிக பிரமாண்டமாக இந்த வீடு உருவாகி வருகிறது. பேய் படங்களை பார்க்கும் போது ஏற்படும் திகில் அனுபவங்களை




இந்த வீட்டினுள் சென்று திரும்பும் போது நேரடியாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

வீட்டினுள் சுமார் 30 நிமிடங்கள் ஒவ்வொருவரும் செலவிட முடியும். அந்த 30 நிமிடங்களும் பல்வேறு வகையான திகிலான அனுபவங்களை உணர முடியும்.

ஒரு நாளைக்கு 800 பேர் வரையிலையே வீட்டுக்குள் அனுமதிக்க கூடிய நிலைமைகள் காணப்படுவதால் , நுழைவு சீட்டுக்களை முற்பதிவு செய்து கொள்வது சிறந்தது.

நுழைவுச் சீட்டானது ஆளொருவருக்கு 750 ரூபா ஆகும். அதனை பெற்றுக்கொள்ள 0776016344 மற்றும் 0772018833 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ள முடியும்.

அதேவேளை திகில் வீட்டுக்கு வெளியே உணவுத் திருவிழாவிற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் முகங்களில் படங்களைக் கீறி கொள்ளவும், செல்பி பூத்தில் படம் எடுத்து மகிழ கூடியவாறான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்கான கட்டணங்கள் வேறானதாகும்.

இந்தத் திகில் வீட்டுக்கு 10 வயதுக்கு குறைவானவர்கள், கர்ப்பிணி தாய்மார்கள், இதய நோய் உள்ளவர்கள் வருவதை தவிர்த்து கொள்வது நல்லது.

ஏனெனில் இது மிக பிரமாண்டமான முறையில் திகிலை ஏற்படுத்த கூடிய வகையில் உருவாகி வருகின்றது.– என்று மேலும் தெரிவித்தனர்.

# யாழில் 'பிக் மீ' ஓட்டோ சாரதி மீது தாக்குதல்!

- பிரபாகரன் டிலக்சன் -

'பிக் மீ' ஓட்டோ சாரதி மீதி யாழ்ப்பாணம் ஓட்டோ சங்கத்தினர் தாக்குதல் மேற்கொண்டுள்ள நிலையில் காயமடைந்த அந்தச் சாரதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இன்று பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அருகில் 'பிக் மீ' ஓட்டோ சாரதி தனது ஓட்டோவைத் தரித்து நிறுத்தியுள்ளார்.

இதன்போது அங்கு கூடிய ஓட்டோ சாரதிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் அந்த ஓட்டோவை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்துமாறு கோரியுள்ளனர்.

வாய்த்தர்க்கம்முற்றியநிலையில்அந்தப் 'பிக் மீ' ஓட்டோ சாரதி மீதும், ஓட்டோ மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலில் 'பிக் மீ' ஓட்டோ சாரதியான சூரியகுமார் தவக்குமார் (வயது 32) என்பவர் காயமடைந்துள்ளார். ஓட்டோவும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

காயமடைந்த சாரதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அம்பிட்டிய தேரர்...

தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவரும் கொழும்புமாவட்டநாடாளுமன்றஉறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"மட்டக்களப்பு அம்பிட்டிய சுமன ரத்ன தேரர், "தென்னிலங்கைத் தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன்" என்று நடுத்தெருவில் கூச்சல் எழுப்பியமைக்கு எதிராக சட்டம் – ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் நடவடிக்கை எடுப்பார் என நம்புகின்றேன். சுமன ரத்ன தேரர், அவர் தனது தாயின் கல்லறை உடைக்கப்பட்டதாக, பகிரங்கமாக இனவாத, வன்முறை கருத்துகளைக் கூறி, மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆகவே, அடுத்து நடைபெறவுள்ள உங்களது மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு, அம்பிட்டிய சுமன ரத்ன தேரருக்கு அதிகாரபூர்வமாக அழைப்பு விடுத்து, அவரது தரப்பையும் கேட்டு, அதில் ஏதும் உண்மை உள்ளதா? இல்லையா? என்ற விபரங்களை முழு நாட்டுக்கும் தெரியப்படுத்துங்கள் என மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தவிசாளர் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் (பிள்ளையான்) நான் நேரடியாகத் தெரிவித்துள்ளேன்.

ஐ.சி.சி.பி.ஆர். என்ற சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டத்தின் 3 (1) உறுப்புரையில், எந்தவொரு நபராலும் யுத்தத்தை தூண்டவோ, வேறுபடுத்தும் விதத்தில் எதிர்வாதம் புரியவோ அல்லது வன்முறைகளில் ஈடுபடுவதோ, ஒன்று திரளுவதோ, இன, மத குரோதங்களை முன்னெடுப்பதோ கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் பலர் கைது செய்யப்பட்டு சிறைவாசங்களுக்கும், வழக்குகளுக்கும் முகம் கொடுக்கின்றனர்.

ஆனால், பல்லாண்டுகளாக மேலாக பொது வெளியில் இனவாத கருத்துக்களைக் கூறியும், வன்முறைளில் ஈடுபட்டும் வரும் அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் மீது இந்தச் சட்டம் இன்னமும் பாயவில்லை. இந்தச் சட்டத்திலிருந்து இவருக்கு இனிமேல் விலக்கு வழங்க முடியாது. இனி இது முடிவுக்கு வர வேண்டும். இவரது பாரதூரமான இனவாத கருத்துக்களுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சட்டம் – ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் மூலம் நடவடிக்கை எடுப்பார் என நான் நம்புகின்றேன்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்றுமுன்தினம் என்னுடன் உரையாடியுள்ளார். அதேபோல், மட்டக்களப்புமாவட்ட செயலாளர் திருமதி. சிறிகாந்தாவுடன் நான் உரையாடினேன். தனது தாயின் கல்லறை உடைக்கப்பட்டதாக, தேரர் பகிரங்கமாகக் கூறியுள்ளமை தொடர்பாக உண்மையைக் கண்டறியுமாறு அவருக்கு அறிவுறுத்தியுள்ளேன். இதுவே முறைப்படி செய்யப்பட வேண்டிய காரியம் என நினைக்கின்றேன்.

தனதுஇனவாதக்கருத்துகள்தொடர்பில் தேரர் மீது ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அது வேறு விடயம். அது சட்டம் – ஒழுங்கு அமைச்சரின் பொறுப்பாகும்.

தேரரது தாயின் கல்லறை உடைக்கப்பட்டிருந்தாலும்கூட, அது தொடர்பில் முறைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, தமிழர்களை குறிப்பாக தென்னிலங்கைத் தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன் எனத் தேரர் கூற முடியாது. இதை இனிமேல் எம்மால் அனுமதிக்க முடியாது. தான் ஏதும் பிரச்சினையை எதிர்கொண்டால், அதற்கு தீர்வைத் தேட முறைப்படியான மாற்று வழி இருப்பது தேரருக்கு விளங்க வேண்டும்." – என்றார்.

### நவம்பர் 20...

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவ தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"நீதிமன்றத்தின் பாதுகாப்பிலுள்ள மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள், உடுப்புக்கள் தவிர்ந்த ஏனைய சான்றாதார பொருட்களை மேலதிக பகுப்பாய்வுக்காகத் தொல்லியல் மேற்படிப்பு நிறுவனத்துக்கு அனுப்ப நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

எமக்கு இருக்கும் நிதியைக் கொண்டு அகழ்வுப் பணியை நவம்பர் 20 ஆம் திகதி ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில், புதைகுழிக்குள் நீர் தேங்காதவாறு போடப்பட்டுள்ள கொட்டகையானது மேலும் 10 அடிக்கு நீட்டப்பட்டுள்ளது. இரண்டு சி.சி.ரி.வி. கமரா எனது வேண்டுகோளையடுத்து அண்மையில் மாவட்ட அரச அதிபரால் பொருத்தப்பட்டுள்ளது.

இம்முறை அகழ்வுப் பணி நடைபெறும்போது ராடர் என்ற கருவியைப் பாதுகாப்பு அனுமதி பெற்று பரீட்சித்துப் பார்க்க எதிர்பார்த்துள்ளோம். இதன் மூலம் எவ்வளவு தூரத்துக்கு குறித்த புதைகுழி உள்ளது என அடையாளப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நிதியை மாவட்ட செயலகத்தைச் சேர்ந்த பிரதான கணக்காளர் தான் கையாளுகின்றார். நீதிமன்றத்தின் கூற்றுப்படி 25 இலட்சம் ரூபா வரையிலான நிதி இருக்கின்றது என அவர் தெரிவித்திருந்தார். அந்த நிதி இரண்டு வாரங்களுக்கு அகழ்வுப் பணி மற்றும் ஏனைய பணிகளை மேற்கொள்ளப் போதுமானதாக இருக்கும்." – என்றார்.

### நெடுந்தீவில்...

இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இளைஞரின் உறவினர்கள் வெளியூரில் வசிக்கும் நிலையில் அவர்களின் வீட்டை இளைஞரே பராமரித்து வருவதுடன், வீட்டின் பாதுகாப்புக்காக அந்த வீட்டில் தங்கியும் இருந்துள்ளார்.

இளைஞரின் வீடு அருகில் உள்ளதால், தனது வீட்டுக்கு உணவுக்காகச் சென்று வரும் நிலையில் நேற்று உண வருந்த இளைஞர் வராததால், வீட்டார் அவரைத் தேடிச் சென்ற போது, பூட்டிய வீட்டினுள் படுக்கையில் அவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் நெடுந்தீவு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### நாவலடி கடற்கரையில்...

சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கருவெப்பங்கேணியை வசிப்பிடமாக கொண்ட 89 வயதுடைய உ.விஜயரத்ன என்பவரே நேற்று இரவு நாவலடி கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 11 மணியளவில் நாவலடியில் உள்ள தனது மகனின் வீட்டுக்கு வருகை தந்திருந்த இவர் மாலை வேளையில் காணாமல்போயிருந்த நிலையில் நாவலடி மயானத்துக்கு முன்பாக உள்ள கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கு அமைவாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரனை அதிகாரி த.தவக்குமார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன், பிரதே பரிசோதனைகளின் பின்னர் நெருங்கிய உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### தீர்வு முயற்சி...

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக் குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை இன்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதன்போதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டார்.

தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்ற தமிழ்த் தேசியப் பிரச்சினைகள், நில அபகரிப்புக்கள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இன்னமும் இரத்துச் செய்யப்படாமல் இருப்பது போன்ற பல விடயங்கள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டன என்று இந்தச் சந்திப்பில் பங்கேற்ற சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

# இலங்கை மின்சார சபையை வெளிநாட்டுக்கு விற்கத் திட்டம்

## எதிர்த்து மின்சார சபை ஊழியர் சங்கம் நாளை போராட்டம்

இலங்கை மின்சார சபை இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாகும். எனினும் நஷ்டத்தில் இயங்குவதாக அரசு கூறி, பல வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு இலங்கை மின்சார சபையை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளது என்று இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் நாளை (01) சுகயீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுப்பதற்கும் தீர்மானித்துள்ளது என்று அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் மேலும் தெரிவித்துள்ளார்.

மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான சட்ட மூலம், கடந்த 4 வருடங்களுக்கும் மேலாக மின்சார சபை ஊழியர்களுக்கு வேதனம் அதிகரிக்கப்படாமை, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மக்களை அசௌகரியப்படுத்தும் வகையில் மின் கட்டணத்தை அதிகரித்தல் ஆகியவற்றுக்கு எதிராக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை மின்சார சபை இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாகும். எனினும் நஷ்டத்தில் இயங்குவதாக அரசு கூறி, பல வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு இலங்கை மின்சார சபையை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எனவே, இந்த விடயங்களுக்கு தமது சங்கம் எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளது என்று இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

# உரங்களுக்குக் கட்டுப்பாட்டு விலை எதிர்காலத்தில் நடைமுறைக்குவரும்

## விவசாய அமைச்சு தெரிவிப்பு




எதிர்காலத்தில் உரங்களுக்கான கட்டுப்பாட்டு விலையை கொண்டுவர நடவடிக்கை எடுக்க உள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உரங்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதே இந்த நடவடிக்கை எடுக்க காரணம் என்று அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பல்வேறு விலைகளுக்கு உரங்கள் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் முன்வைத்த முறைப்பாடுகளை கருத்தில் கொண்டே விவசாய அமைச்சு இந்த தீர்மானத்தை மேற் கொண்டுள்ளது.

அதன்படி உர விற்பனை தொடர்பாக முறையான ஆய்வு மற்றும் விசாரணைக்கு பின்னர் உரங்களுக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மருந்து இறக்குமதியில் குளறுபடி; மூவருக்கு வெளிநாடு செல்லத் தடை!

போலி ஆவணங்களை தயாரித்து தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் அதன் நிறுவன உரிமையாளருக்கும், அதற்கு அனுமதி வழங்கிய அரச உயர் அதிகாரிகள் இருவருக்குமாக மூவருக்கு வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தயாராக இருப்பதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மனுவொன்றின் ஊடாக முன்வைத்த முறைப்பாடுகளை அடுத்து மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதன்படி, நிறுவனத்தின் உரிமையாளரான 'அருண தீப்தி' என அழைக்கப்படும் சுகத் ஜானக பெர்னாண்டோ, மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபையின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் வைத்தியர் விஜித் குணசேகர, சுகாதார அமைச்சின் விநியோக பணிப்பாளர் வைத்தியர் கபில விக்கிரமநாயக்க ஆகிய சந்தேக நபர்களுக்கு எதிராக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

போலியான ஆவணங்களைத் தயாரித்து 22,500 இம்யூனோ குளோபுலின் நோய் எதிர்ப்பு சக்தி ஊசி மருந்து குப்பிகளை இறக்குமதி செய்ததாகக் கூறப்படும் மருந்து நிறுவனம் குறித்து குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணை நடத்தி வருகிறது. இதன் போது 130 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மோசடி இடம்பெற்றுள்ளது என்பது தெரியவந்துள்ளது.

இதேவேளை, சுகாதார அமைச்சின் தகவல் முகாமைத்துவ அமைப்பு தொடர்பில் முறையான ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மொரட்டுவ பல்கலைக்கழகத்துக்கு அரச கணக்குகள் குழுவால் நியமிக்கப்பட்ட உபகுழுவால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு அதிக எண்ணிக்கையிலான தகவல் மேலாண்மை அமைப்புகளை நிறுவியுள்ள போதிலும் சுகாதார அமைப்பைக் கட்டமைப்பதில் அதன் பங்களிப்பு தொடர்பில் குறித்த உபகுழு அவதானம் செலுத்தியுள்ளது.

நாடளாவிய ரீதியில் 723 வைத்திய சாலைகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸ்வஸ்த தகவல் முகாமைத்துவ அமைப்பை மேலும் 436 வைத்திய சாலைகளில் நிறுவுவதற்கான காலவரையறையை தயாரிக்குமாறும் உபகுழு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஏமாற்றும் அரசு

இலங்கை வந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் குழு தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தனையும் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் எம்.பியையும் சந்தித்துப் பேசி இருக்கின்றது.

தமிழர் தரப்பின் கவலைக்குரிய பிரதான விடயங்களை சம்பந்தன் - சுமந்திரன் இணை ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் குழுவுக்கு விளக்கி இருக்கின்றது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு தரப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்ற விடயங்கள் வரை பலவற்றையும் ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவுக்குத் தாங்கள் விளக்கினர் என சுமந்திரன் தகவல் வெளியிட்டு இருக்கின்றார்.

இந்த நாடாளுமன்றக் குழு பிரதிநிதித்துவப்படுத்தும் ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பா எங்கும் பரவிக் கிடக்கும் 27 நாடுகளின் ஒன்றித்த அரசியல் மற்றும் பொருளாதார கட்டமைப்பு. சுமார் 45 கோடி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கூட்டமைப்பு.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்றைத் தராமல் இழுத்தடித்து, ஏமாற்றி வரும் இலங்கை அரசு, உலகின் மிகப் பெரிய கூட்டமைப்பான ஐரோப்பிய ஒன்றியத்தையும் கூட தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமையை சம்பந்தன் - சுமந்திரன் இணை அந்தக் குழுவிடமே ஒப்பிட்டு சுட்டிக்காட்டி இருக்கும் என்று நம்பலாம்.

இப்போதைய பொருளாதார வீழ்ச்சியில் முடங்கி கிடக்கும் இலங்கைக்கு ஓரளவு உயிர்வாயு வழங்குவது போல ஒரு பொருளாதார உதவி கிட்டுமானால் அது ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் வரித் தீர்வையற்ற ஏற்றுமதி வசதியான ஜி.எஸ்.பி. சலுகையாகும்.

வரி விதிப்பற்ற ஏற்றுமதி வசதி காரணமாகவே மற்றைய நாடுகளுடன் போட்டி போட்டுக் கொண்டு தைத்து ஆடைகள் உட்பட பல ஏற்றுமதிகளை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வெற்றிகரமாக மேற்கொண்டு, தாராள அந்நிய செலாவணியை இலங்கை நாடு ஈட்டிக் கொண்டிருக்கின்றது.

இலங்கையின் மனித உரிமை மீறல் போக்குக் காரணமாக 2007 இல் இந்த வசதியை - சலுகையை - நிறுத்தியது ஐரோப்பிய ஒன்றியம். பின்னர் 2017 இல் அதிகாரத்தில் இருந்த நல்லாட்சி அரசு காலில் விழாத குறையாக கெஞ்சியதால், சில நிபந்தனைகளின் அடிப்படையில் அந்த சலுகையை மீண்டும் வழங்கியது அது.

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்பது அந்த நிபந்தனைகளில் ஒன்று. அதற்கு உறுதி கொடுத்து சலுகையை பெற்று, ஆறு வருடங்களாக அதை அனுபவித்துக் கொண்டிருக்கும் கொழும்பு ஆட்சிப்பீடம், அந்தச் சட்டத்தை இன்னும் நீக்கவில்லை. இழுத்தடிக்கின்றது. தமிழர் தரப்பு கூறாமலேயே கொழும்பின் ஏமாற்றுப் போக்கு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விளங்கியிருக்கும் என்று நம்பலாம்.





## மட்டக்களப்பில் இரத்ததானம்

(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு கிரான் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் 78 ஆவது கல்லூரி தினத்தை முன்னிட்டு பழைய மாணவர் அமைப்பால் ‘உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்’ என்ற தொணிப் பொருளில் இரத்தான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்லூரி தினத்தை முன்னிட்டு கல்லூரியின் எதிர்கால கல்வி அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதில் ஒரு நிகழ்வாக இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பெரும் எண்ணிக்கையான பழைய மாணவர்கள் இரத்ததானம் வழங்கினர்.

இந்த நிகழ்வில் கிரான் பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாவு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பாளர் டாக்டர் க.விவேகானந்தநாதன் மற்றும் கல்லூரி அதிபர் ம.தவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.



## பாலர் பாடசாலைக்கு மடிக் கணணி!

(சப்னா றிபாஸ்)

சாய்ந்தமருது ‘லீத்வே’ பாலர் பாடசாலைக்கு மடிக் கணணி வழங்கி வைக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (27) இடம் பெற்றது.

பாடசாலை அதிபரின் வேண்டுகளுக்கு இணங்க மாணவர்களின் நண்மை கருதி கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளரும் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தனது சொந்த நிதியுதவி மூலம் இக் கணணியை அதிபரிடம் கையளித்தார்.

இதேவேளை இப்பிராந்தியத்தில் இருக்கும் சில பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகளுக்கும் சிராஸ் மீராசாஹீப் சென்று மாணவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்து உதவிகள் செய்து வருகிறார். கற்றல் உபகரணங்களும் வழங்கி வருகிறார்.



# கனடாத் தமிழ் எழுத்தாளர்களது ஏற்பாட்டில் படைப்பாளிகள், அறிஞர்கள் கௌரவிப்பு!

(என்.புவியரசன்)

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின்ஏற்பாட்டில்படைப்பாளிகளையும் அறிஞர்களையும் கௌரவித்து விருதுகள் வழங்கும் விழா கடந்த சனிக்கிழமை ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

கனடாவில் கடந்த 30 ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கி, தமிழ் இலக்கியம் மற்றும் படைப்பிலக்கியத்தின் கூறுகளாக விளங்கும் கவிதை, சிறுகதை ஆகிய துறைகளில் கருத்தரங்குகளையும் போட்டிகளையும் நடத்திவரும் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஏற்பாட்டில் இந்த வருடத்துக்கு உரிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.



கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய தலைவர் அகணி சுரேஸ் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. துணைச் செயலாளரும் இணையத்தின் ஆரம்பச் செயலாளராக பணி யாற்றியவருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் இதன்போது உரையாற்றினார்.

கனடாவில் தற்போது வாழ்ந்த வண்ணம் தமிழ்ப் பணியையும் இலக்கியப் பணியையும் இணைந்தே ஆற்றி வரும் பத்து எழுத்துலகச் சிற்பிகளுக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

பேராசிரியர் இ. பாலசுந்தரம், பேராசிரியர் நாகராஜ ஐயர் சுப்பிரமணியன், முனைவர் பால சிவகடாட்சம், முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ், எழுத்தாளர்களான தங்கராசா சிவபாலு, சின்னையா சிவனேசன், பாலா குமாரசாமி (தேவகாந்தன்), 'சிந்தனைப் பூக்கள்' பத்மநாதன், கலைஞர் 'சோக்கல்லோ சண்முகம்' தாமோதரம்பிள்ளை சண்முகநாதன், 'வீணை மைந்தன்' தெய்வேந்திரன் சண்முகராஜா ஆகிய பத்து படைப்புலகம் கலையுலகம் சார்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

நூற்றுக் கணக்கான பார்வையாளர்கள் கலந்து சிறப்பித்த இந்த விழாவில் தமிழ் பேசும் அரசியல் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினரும் துணையமைச்சருமான விஜேய் தணிகாசலம் மற்றும் நகரசபை ஆணையாளர் யுனைற்றா நாதன் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.











# விசேட தேவையுடைய மாணவருக்கு உணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் மருதமுனை ஹியுமன் லிங்க் நிறுவனத்தின் விசேட தேவையுடைய 53 மாணவர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். எம்.எம். முஷாரப்பால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வு கல்முனை அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் இணைப்பாளர் பி .எம் .எம்.ஜௌபர் ஏற்பாட்டில் ஹியுமன் லின்க் நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.கமருதீன் தலைமையில் கடந்த புதன்கிழமை (25) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் வி.சிவகுமார் , சமூக சேவை உத்தியோகத்தர் எம். எம்.ஜெஹ்ஸான், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் மற்றும் பிரத்தியேக செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# யானைகள் இறந்த சம்பவம்; ஒருவர் சந்தேகத்தில் கைது!



ஹம்பேகமுவ, புருதகொல்ல பிரதேசத்தில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (30) திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர் அந்தப் பகுதியில் உள்ள விவசாய நிலத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் காவலாளியாக வேலை செய்து வந்துள்ளார்.

அந்த நபர் காட்டு யானைகளை விரட்டுவதற்காக சொத்துக்களை சுற்றி சட்டவிரோதமாக மின்சார வேலியை அமைத்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விவசாய நிலத்துக்குள் புகுந்த இரண்டு யானைகள் வேலியில் சிக்கியதில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த யானைகளுக்கு 25 மற்றும் 15 வயது இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கல்தோட்டை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் சட்டவிரோதமான முறையில் மின்சார வேலியை அமைத்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.





# ஓய்வு நிலையில் கௌரவிப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி ஓய்வு பெறும் இராசையா கணேசமூர்த்தியை கௌரவிக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

காரைதீவைச் சேர்ந்த கணேசமூர்த்தி வவுனியாவில் முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இணைந்து பின்னர் நாவிதன்வெளி கல்முனை வடக்கு பிரதேச செயலகங்களில் பதில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றி சுப்பரா பரீட்சையில் சித்தி பெற்று திருக்கோவில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராக இறுதியில் பணியாற்றினார்.

அனைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களதும் பங்குபற்றுதலுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

# ஏறாவூர் ஆஸ்பத்திரிக்கு அலி ஸாஹிர் எம்.பி. !

(கே. எ. ஹமீட் )

மட்டக்களப்பு மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா திடீர் விஜயம் ஒன்றை ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு மேற்கொண்டிருந்தார்.

இதன்போது ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் சசிகுமார் தலைமையிலான நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினாரல்.

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் குறைபாடுகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

வெளிநோயாளர் பிரிவு மற்றும் மாதாந்த சிகிச்சைக்கு வரும் நோயாளர்களது அசௌகரியங்கள் நிவர்த்திக்கப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.



அத்துடன் ஏறாவூர் பிரதேசத்தில் காணப்படும் சிறுநீரக நோயாளிகள் தங்களது குருதி கழிவகற்றல் சிகிச்சைகளுக்காக (டயலசிஸ்) வேறு வைத்தியசாலைகளுக்கு செல்வதன் அசௌகரியங்கள் குறித்து தனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளர் நழீம், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் அம்ஜத் மௌலானா மற்றும் முன்னாள் அதிபர் சயீத் உட்பட பலரும் இதில் பங்கேற்றிருந்தனர் .




# முத்தரிப்புத்துறையில் வழக்கற்றுப் போன அம்பா பாடல்கள்...!

மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேசத்தில் முத்தரிப்புத் துறையானது அன்று தொடக்கம் இன்று வரை மிகப்பெரும் திரளான மீனவர்களை கொண்ட இடமாகும். இங்கு மீனவ சமூகம் என்பதால் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். இந்த ஒற்றுமைக்குச் சான்றாக அவர்கள் மத்தியில் வழக்கத்திலிருந்த அம்பா பாடல்களையும் அடையாளப்படுத்த முடியும்.

அம்பா பாடல்கள் என்பன மீனவ சமுதாயத்துக்கேயுரிய நாட்டுப்புற பாடல் வகையாகும். இயற்கையின் பேராற்றல் மிக்க சக்திகளில் ஒன்றாகிய கடலில், தங்கள் உயிரைப் பணயம் வைத்து மீன்பிடியில் ஈடுபடும் தொழிலாளர்கள் கடலுக்குச் சென்று வீடு திரும்பும் வரையில் தமது குடும்பத்தினரை எண்ணி மனம் கலங்குவர். அதனால் இயற்கைச் சீற்றங்களாலும், வலிமை பொருந்திய நீர் விலங்குகளாலும் எவ்வித துன்பங்களும் நேரக்கூடாது என கடவுளை வணங்கி தமது மனச் சோர்வைப் போக்கிக் கொள்ளவும் மீன்பிடி சிறக்கவும் பாடிய பாடல்களே அம்பா பாடல்களாகும். இவை கப்பல் பாடல்கள், தோணிப் பாடல்கள், ஓடப் பாடல்கள் என பல பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது.

இந்த அம்பாவை முன்னைய மீனவர்கள் ஒரு பெரிய பலமாக எடுத்துக் கொண்டார்கள். தாங்கள் வள்ளத்தை இழுக்கும் போதும், தண்ணீரில் இறங்கும் போதும் பயன்படுத்துவார்கள்.

அதுபோல முன்னைய காலத்தில் வலைவளைப்பு முத்தரிப்புத்துறை மக்களின் பிரதான தொழிலாக இருந்தது. அந்நேரம் மீனவர் ஒருவர் கடலில் மீன்களை கண்டால் குறிப்பாக நெத்தோலி, தொண்டன், சாளை, காரல் ஆகிய மீன்கள் திரளாகக் கடலிலே வரும்போது தனது உச்சக் குரலை எழுப்பிச் சைகை காட்டி மீனவர்களை ஒன்று திரட்டி ஒரு நொடிப் பொழுதில் அந்த மீனை நோக்கி வள்ளத்தை வலித்துச் சென்று அல்லது தாங்கி சென்று வலையால் வளைத்துவிடுவர். பின் அந்த வலையில் இரு பக்கமும் ஆள்போட்டு தங்களுடைய பலத்தைக் காட்டி இந்த அம்பாக்களை சொல்லி ஆடிப்பாடி அருமையாக வலைகளை இழுப்பர். பின்னர் மடி மீனை இழுப்பதற்கு இந்த அம்பாவை பயன்படுத்தி தங்கள் பலத்தை விட இந்த அம்பாவின் பலமே பெரிதென எண்ணி மீன்களை இழுப்பர்.

இவற்றுள் முத்தரிப்புத்துறையில் பின்வரும் அம்பா பாடல்கள் அதிகம் வழக்கத்தில் இருந்ததாக நம்பப்படுகிறது.

1

ஏலோ இலோ இலோ  
ஏண்டி பெட்டி,  
எதுக்கு வந்தா?  
இலந்தப்பழம் கொண்டு  
நெல்லுக்கு வந்தன்  
நெல்லு ஒருபிடி  
கொண்டலலோ வந்தன்



கொண்டலடிக்க  
கோடை கொண்டோட

கோடைக் காற்று  
பாடிப்பாடி வீச  
பாரோ படகோ  
மானம் கல்லோ

கரம்பக் கயிறோ  
வில்லோ கயிறோ  
வேந்தன் பகையோ  
மலைடா மலே  
திருக்குணா மலேடா  
மட்டக்களப்படா  
செட்டியார் புரமடா  
எட்டிப்பிடியடா  
பிடிச்சா வருவான்  
தானே வருவான்  
கஞ்சல் காரன்

கஞ்சல் வீரன்  
வீரனுக்கு வீரன்  
வீரவத் தோழன் தோழன்  
தோண்டி தாமம் பூசி

2

ஏலோ  
இலோ  
இலோ  
ஏலோ  
இலோ  
ரூடவ்லோ  
ஏ ஆலோ ஆலே  
ஏ ஆலோ ஆலே  
ஆலே இல்லாதவன்  
அவனும் ஒரு ஆளோ  
ஆக்களப் பாத்தா  
ஆனைகள் போல ஆக்கபடும்பாடு  
பார்க்கல்லோ போறான்

3

ஏலோ இலோ இலோ  
ஏலோ இலோ இலோ  
நொங்கு  
பனங்கா  
கோபன்ன தேங்கா  
தேங்கா மிளகு  
தெறிகொட்ட பாக்கு  
வாங்கடி மகளே  
வளர்ந்த புருவம்  
மன்னவா என்றால்  
மலையும் இழகும்  
கற்றவரானால்  
கல்லும் இழகும்  
நாச்சியா ஊரு.

ஆனால் தற்போது நவீன தொழில் ஊடாக இந்த அம்பா மறைந்து விட்டது. காரணம் நவீன இயந்திரங்களால் படகு பூட்டப்பட்டு இருக்கின்றது. உதாரணமாக இயந்திரங்கள் படகின் வெளி இணைப்பில் இருப்பதால் இந்தப் படகை வருகின்ற வேகத்திலே தரையில் ஏற்றி விடுகின்றார்கள். அதனால் படகு இழுக்கும்போது கூறப்படும் அம்பாக்களும் இப்போது மறைந்துவிட்டன.

பாரம்பரிய மீன்பிடி முறைகளுள் ஒன்றான கரைவலையும் இப்போது இல்லாமல் போய்விட்டது.

இருந்தும் வரலாற்றுப் புத்தகங்களில் இது பதியப்பட வேண்டும். இவ்வாறெல்லாம் அம்பா பாடல்கள் இருக்கின்றன. இதை ஆர்வம் உள்ளவர்களும் எதிர்கால சந்ததியினரும் அறிய வேண்டும். எத்தனை இ,யந்திரங்கள் இருந்தாலும் மனித வலுவால் ஆடிப்பாடி செய்யும் வேலைக்கு நிகராக எந்த ஒரு வேலையும் இருக்காது. அப்படி இருந்தாலும் அது மனித வலுவால் செய்யும் வேலைக்கு அழகாக இருக்காது என்பதே முத்தரிப்புத் துறையின் பழமையான மீனவர்களது ஆதங்கமாகவுள்ளது.

**அருள்பிரகாசம் கிரிஜா,**  
ஊடகக் கற்கைகள் துறை,  
யாழ். பல்கலைக்கழகம்.




# திருமலையில் போலியோ தினம்

(அப்துல்சலாம் யாசீம்)

உலக போலியோ தினம் திருகோணமலை றோட்டரிக் கழகத்தால் நினைவு கூறப்பட்டது.

திருகோணமலை றோட்டரி கழகம் சார்பில் "உலக போலியோ தினம் 2023" நிகழ்வுகள் திருகோணமலை மாதுமை அம்பாள் தமிழ் வித்தியாலய மாணவர்கள் மத்தியில் இடம்பெற்றது.

2023 ஆம் ஆண்டு உலக போலியோ தினத்தின் கருப்பொருள் - "தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆரோக்கியமான எதிர்காலம்" ஆகும்.



உலக போலியோ நிலைமை மற்றும் சர்வதேச றோட்டரி கழகத்தின் போலியோவை உலகில் இருந்து நீக்குவதற்கான செயல் பற்றிய முக்கிய விவரங்களை டாக்டர் ஞானகுணாளன் வழங்கினார்.

அத்துடன் இலங்கையில் இருந்து எவ்வாறு போலியோ நோய் ஒழிக்கப்பட்டது போன்ற விடயத்தையும் எடுத்துக் கூறினார்.

றோட்டரி தலைவர் டாக்டர் சௌந்தரராஜன் நூலகத்துக்குப் புத்தகங்களை வழங்கினார்..



# மாணவத் தலைவர்களுக்கு சின்னம் அணிவித்தல்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் தெற்கு வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பெருக்குவற்றான் அல்மின்ஹாஜ் முஸ்லிம் மஹா வித்தியாலயத்தின் மாணவர் தலைவர்களுக்கு சின்னம் அணிவிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (26) இடம்பெற்றது.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் எனும் மணி மகுடத்தின் கீழ், பாடசாலை அதிபர் எம்.எச்.எம். றாசிக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உடப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜகத் சேனாரத்ன பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அத்துடன், பெருக்குவட்டான் கிராம உத்தியோகத்தர் பிரியந்தி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கீர்த்தி லதா, பெருக்குவட்டான் ஜும்ஆ மஸ்ஜிதின் செயலாளர் ஏ.எம். நாசிக், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் ஆசிரியர் எஸ். எல்.எம். ஜெனீஸ் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, இரண்டு சிரேஷ்ட மாணவர் தலைவர்கள் உள்ளிட்ட 23 மாணவ தலைவர்களுக்கு சின்னங்கள் அணிவிக்கப்பட்டன.

இதேவேளை, பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கல்வி பற்றிய உளவள ஆலோசனைக் கருத்தரங்கு ஒன்றும் இடம்பெற்றது. உளவள ஆலோசகர் பஸ்லால் ஏ காதர் வளவாளராக கலந்து கொண்டார்.



# சாய்ந்தமருது பாடசாலைக்கு வர்ணப் பூச்சுகள் அன்பளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலை கல்வி சமூகத்தின் சார்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளை தொடர்ந்து ஒரு தொகுதி வர்ணப் பூச்சு பெட்டிகளை றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி சமூக சேவை அமைப்பு பாடசாலை அதிபர் நஸ்லின் றிப்கா அன்சாரிடம் வழங்கியது.

வகுப்பறைகளில் பிள்ளை நேய கற்றல் சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த உதவியை இந்தப் பாடசாலை மாணவர்களின் நலன்களுக்காக வழங்கியுள்ளமை பாராட்டத்தக்க விடயம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் றிஸ்லி முஸ்தபாவின் இணைப்பதிகாரியும் திடீர்மரண விசாரணை அதிகாரியுமான அல் ஜவாஹிர் , பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# தொழில் நிறுவனங்கள் பற்றிய ஆய்வு நூல் கிழக்கில் வெளியீடு!


(நூருல் ஹுதா உமர் )

தென்கிழக்கு பல்கலைகழகம் ஆரம்பிக்கப்பட்டு 27 வருட பூர்த்தியையும் ஸ்தாபகர் தினத்தையும் முன்னிட்டு நிகழ்வுகளில் ஓர் அங்கமாக பேராசிரியர் ஏ.எல் அப்துல் றவூப் எழுதிய "இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பற்றிய ஆய்வு நூல்" பல்கலைக்கழக வணிக மையத்தின் ஏற்பாட்டில் தொழில்நுட்ப பீட கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் பிரதிநிதியாக ஆளுநரின் செயலாளர் சிரேஷ்ட சிவில் நிர்வாக சேவை அதிகாரி எல்.பி. மதநாயக்க கலந்து கொண்டார். ஆளுநரின் செய்தியைத் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளரும் ஆளுநரின் மேலதிக செயளாலருமான ஏ.எஸ்.எம் பயாஸ் வாசித்தார்.

பேராசிரியர் ஏ.எல் அப்துல் றவூப் வரவேற்புரையை தொடர்ந்து நூல் விமர்சன உரையை பேராசிரியர் எம்.பி.எம். இஸ்மாயிலும் பல்கலைக்கழக வணிக மையம் தொடர்பில் கலாநிதி எம்.என்.ஏ. ஹினாஸும் நிகழ்த்தினர்.





நிகழ்வுக்கு விஷேட பேச்சாளராகவும் விஷேட அதிதியாகவும் பேராசிரியர் துசித அபேதுங்க கலந்துகொண்டு விஷேட உரையாற்றினார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு நூலின் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்.

பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

(ந.குகதர்சன் )

மட்டக்களப்பு கிரான் புலிபாந்த கல் பிரதேசத்தில் பிரதேச மக்களின் நன்மை கருதி இலவச கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

232 அவது காலால் படை பிரி கேட்டால் இந் நிகழ்வு புலிபாந்தகல் ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவு சுகா தார வைத்தியர் அதிகாரி அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந் நிகழ்வானது கிழக்கு மாகாண பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்னவின் வழிகாட்டலில் இடம்பெற்றது.

நிகழவில் அதிதிகள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். மதகுருவால் ஆசிர்வதிக்கப்பட்டு மாண வர்களின் கலாச்சார ரீதியாக பாரம்பரிய நடனத்துடன் நிகழ்வு மண்டபத்துக்கு



அழைத்துவரப்பட்டு மங்கள விளக்கேற்ற லுடன் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

பின்னர் கண் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு மூக்கு கண்ணாடி வழங் கப்பட்டது.

நிகழ்வில் 23 ஆவது காலால் படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நிலந்த பிரேமரத்ன 232 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தள பதி பிரிகேடியர் அஜித் புஸ்பகுமார பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு மற்றும் நன்கொடையாளர் ஜோர்ச் குணரட்ன அகியோர் கலந்து கொண டனர்.

# யானைகளின் தொல்லை; கட்டுப்படுத்த நடவடிக்கை!

## சம்மாந்துறை பிரதேச செயலர் ஹனீபா தெரிவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்தூறை பிரதேச செயலக பிரிவில் காட்டு யானையின் தொல லையில் இருந்து பொது மக்களையும் அவர்களது உடமைகளையும் பாது காப்பதற்கு விஷேட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சம்மாந்துறை பிரதேச செயலர் எஸ்.எல்.எம்.ஹனீபா தெரிவித்தார்.

அண்மைக் காலமாக சம்மாந்துறை பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லையால் உயிரிழப்புக்களையும் உடமை இழப்புகளையும் பொது மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

காட்டு யானைகளால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டதுடன்,




பாதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட குடும்பத் தினரையும் அண்மையில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபே விக்ரம சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் காட்டு யானைகளின் தொல்லையில் இருந்து எதிர்காலத்தில் பொதுமக்களையும் உடமைகளையும் பாதுகாக்க யானை வேலி அமைப்பது சம்பந்தமாக மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தன்னை பணித்துள் ளார் என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அந்த வகையில் காட்டு யானைக ளின் தொல்லையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிய பொறிமுறை களை ஏற்படுத்துவதற்கான தீர்மானங் கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.

# மண்சரிவால் இடம்பெயர்ந்த தோட்டத் தொழிலாளருக்கு நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை உடனடியாக வழங்குக!



(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா, பிரன்ஸ்சுவிக் தேயிலைத் தோட்டத்தில் மண்சரிவால் இடம்பெயர்ந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட தோட்ட வீடுகளை உடனடியாக வழங்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

மஸ்கெலியா தோட்டக் கம்பனியின் கீழ் இயங்கும் புரவுன்ஷீக் தோட்ட கட்டுப்பாட்டில் வீடுகள் உள்ளன.

2017 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் ஏற்பட்ட திடீர் மண்சரிவால் வீடுகளை இழந்த 18 தோட்டத் தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்குவதற்காக அதே தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய தோட்ட வீட்டுத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் 6 வருடங்களாக நிறுத்தப்பட்டுள்ளன.

மண் சரிவில் இடம்பெயர்ந்த தோட்ட சமூகத்தினருக்கு இதுவரை வீடுகள் வழங்கப்படவில்லை. தொழிலாளர்கள் விரக்தியில் உள்ளனர்.

அப்போதைய அரசின் தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரத்தின் வேண்டுகோளுக்கு இணங்க 07 பேர்ச்சஸ் காணியுடன் கூடிய இந்த 18 தோட்ட வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதுவரை அந்த வீடுகளின் கட்டுமானம் முழுமையடையாத நிலையில் உள்ளது.

மண்சரிவால் வீடுகளை இழந்த தோட்டத் தொழிலாளர்கள் எமலினா பிரிவில் குறைந்தபட்ச வசதிகள் கூட இன்றித் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாக இந்தப் பகுதியில் பெய்து வரும் மழையால் இந்த மக்கள் சொல்லொணா துயரத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் 18 வீடுகளது பணிகளையும் விரைந்து முடித்து, ஒப்படைக்குமாறு பாதிக்கப்பட்டோர் கேட்டுள்ளனர்.

# காணி உறுதிப் பத்திரம் பாடசாலைகளுக்கு வழங்கல்



(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி மற்றும் அல்-மினாரா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு காணி உறுதி பத்திரம் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நேற்று (30) இடம்பெற்றது.

பிரதேச செயலர் எம். ஏ. சி. அகமது ஷாபீர் அக்கரைப்பற்று வலயக்கல்வி பணிப்பாளர் ஏ. எம். றஹ்மத்துல்லாஹ் விடம் காணிக்கான உறுதி பத்திரம் உத்தியோக பூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் காணி உத்தியோகத்தர் எம். ஐ. முகம்மட் றியாத் விடயத்துக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் பழீல் சரபியா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஆளுநர் ரவி போட்டி அரசியல் நடத்துகிறார்: தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல்



தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, போட்டி அரசியல் நடத்துகிறார் என உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழக ஆளுநர் ஆர்.என். ரவிக்கும், முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு நீடித்து வருகிறது.

இந்த நிலையில், அரசுத் தரப்பில் அனுப்பப்படும் கோப்புகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் வேண்டுமென்றே காலதாமதப்படுத்துவது சட்டவிரோதம் என அறிவிக்கக் கோரி தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசு தாக்கல் செய்துள்ள மனுவில், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கியமான மசோதாக்களை தாமதப்படுத்துவது, பரிசீலிக்கத் தவறுவது, ஒப்புதல் அளிக்கத் தவறுவது போன்ற நடவடிக்கைகளில் ஆளுநர் ஈடுபடுகிறார். இதன் மூலம், மாநில அரசின் நிர்வாகத்துக்கு ‘அரசியலமைப்பு முட்டுக்கட்டையை’ஆளுநர் உருவாக்கியுள்ளார்.

சட்டபூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்துக்கு அரசியல் போட்டியாக ஆளுநர் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார். அவரது செயலற்ற தன்மை மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவருக்கும் மாநிலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்துக்கும் இடையே முட்டுக்கட்டையை ஏற்படுத்தியுள்ளது. மாநில மக்களின் தீர்ப்புக்கு எதிராக ஆளுநர் விளையாடிக் கொண்டிருக்கிறார்.

‘தினசரி கோப்புகள், பணி ஆணைகள், பணி நியமன ஆணைகள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் மீது வழக்கு தொடருவதற்கான ஒப்புதல், தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் உள்ளிட்டவற்றுக்கு கையெழுத்திட்டு ஒப்புதல் அளிக்கும் பணியை ஆளுநர் மேற்கொள்ளாமல் உள்ளார். விரோத மனப்பான்மை காரணமாக ஆளுநர், மாநில நிர்வாகத்துக்கு ஒத்துழைப்பு அளிக்காமலும், ஒட்டுமொத்த நிர்வாகத்துக்கும் எதிராக முட்டுக்கட்டை போடும் வகையிலும் செயல்படுகிறார்.

தமிழக ஆளுநரின் செயலற்ற தன்மை, புறக்கணிப்பு, தாமதம் மற்றும் இணங்கத் தவறியது ஆகிய தன்னிச்சையான செயல்கள் சட்டத்துக்குப் புறம்பானது என உச்ச நீதிமன்றம் அறிவிக்க வேண்டும். மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மற்றும் அவருக்கு அனுப்பப்பட்ட மசோதாக்களை பரிசீலிக்காமல் இருப்பது அதிகார துஷ்பிரயோகம் அன அறிவிக்க வேண்டும்.

ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர் பதவி என்பது தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் செயல்படக்கூடியது அல்ல. அமைச்சரவைக் குழுவின் உதவி மற்றும் ஆலோசனையின் அடிப்படையில் மட்டுமே அவர்களின் செயல் இருக்க வேண்டும். எனவே, ஆளுநர் ஆர்.என். ரவி, நிலுவையில் உள்ள மசோதாக்கள் மற்றும் அரசாங்க உத்தரவுகளை பரிசீலிக்க ஒரு காலக்கெடுவினை உச்ச நீதிமன்றம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


# சந்திரபாபு நாயுடுவுக்கு பிணை!

திறன் மேம்பாட்டு கழக ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையிலிருக்கும் ஆந்திர முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு மருத்துவ காரணங்களுக்காக நான்கு வார இடைக்கால பிணை வழங்கி ஆந்திர உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சந்திரபாபு நாயுடுவின் ஆட்சி காலத்தில் இளைஞர்களின் வேலை வாய்ப்புக்காக திறன் மேம்பாட்டு கழகத்தில் சீமென்ஸ் நிறுவனம் மூலம் பொறியியல் கல்லூரிகள் உட்பட தொழில்நுட்ப கல்லூரி மாணவ, மாணவியருக்கு பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டது.

அதில் ஆந்திர அரசு 10 சதவீதம் நிதி வழங்கியது. 10 சதவீதம் மற்றும் ஜி.எஸ்.டி 40 லட்சம் ரூபா என மொத்தம் 371 கோடி கோடி நிதியை சீமென்ஸ் நிறுவனத்திற்கு ஆந்திர அமைச்சரவை ஒப்புதலின் பேரில் அப்போதைய சந்திரபாபு நாயுடு அரசு வழங்கியது.

இதில் 118 கோடி ரூபா ஊழல் இடம்பெற்றுள்ளது எனவும் அதில் சந்திரபாபு நாயுடுவுக்கு தொடர்பு இருக்கிறது என்றும் கடந்த 2021 ஆம் ஆண்டில் தற்போதைய ஜெகன் மோகன் ரெட்டி அரசு குற்றம்சாட்டியது.



இதுதொடர்பாக சி.ஐ.டி. பொலிஸார் 2021 ஆம் ஆண்டே வழக்குபதிவு செய்தனர். இது தொடர்பாக சி.ஐ.டி. பொலிஸார் சந்திரபாபு நாயுடுவை கடந்த மாதம் 9 ஆம் திகதி கைது செய்து விஜயவாடா லஞ்ச ஒழிப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இதனை தொடர்ந்து சந்திரபாபு நாயுடு ராஜமுந்திரி மத்திய சிறையில் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில் பிணை கோரி லஞ்ச ஒழிப்பு நீதிமன்றத்தில் சந்திரபாபு நாயுடு தரப்பில் மனு அளிக்கப்பட்டது. அந்த மனுவை நீதிமன்றம் நிராகரித்தது. தொடர்ந்து உயர் நீதிமன்றத்தில் பிணை கோரி மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த நிலையில், மருத்துவக் காரணங்களுக்காக சந்திரபாபு நாயுடுவுக்கு 4 வார இடைக்கால பிணை வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# போர் நிறுத்தத்துக்கு வாய்ப்பில்லை: இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டம்!



போர் நிறுத்தம் என்பது இஸ்ரேல், ஹமாஸிடம் சரணடைவதற்கு சமமானது. ஹமாஸுக்கு எதிரான போரில் வெற்றி பெறும் வரை இஸ்ரேல் போராடும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் ஹமாஸ் குழுவுக்கும் இடையேயான போர் தொடர்கிறது. இன்னும் சுமுகமான தீர்வு எட்டப்படவில்லை. அப்பாவி மக்கள் உணவு, தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் காசா வீதிகளில் உலாவும் புகைப்படங்கள் வெளியாகி சக மனிதர்களை கவலையில் ஆழ்த்துகிறது.

நூற்றுக்கணக்கான நோயாளிகள் நேற்று காசாவில் உள்ள மருத்துவ மனைகளில் சிக்கிக் கொண்டிருகின்றனர் என பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு டெல் அவிவில் செய்தியாளர்களை சந்தித்தார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில், காசாவில் போர் நிறுத்தம் தொடர்பான இஸ்ரேலின் நிலைப்பாட்டை தெளிவு படுத்த விரும்புகிறேன். போர் நிறுத்தம் என்பது இஸ்ரேல், ஹமாஸிடம் சரணடைவதற்கு சமமானது. பயங்கர வாதத்துக்கு அடிபணிவது போல ஆகி விடும். இது நடக்காது. ஹமாசால் பிடிக்கப்பட்ட பணயக்கைதிகளை நிபந்தனையின்றி விடுவிக்க சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும்.

பியர்ல் ஹார்பர் தாக்குதலுக்குப் பின்னர், இரட்டைக் கோபுர தாக்குதலுக்குப் பிறகும் அமெரிக்கா போர் நிறுத்தத்தை நிராகரித்தது. அதே போன்று இஸ்ரேல் மீது ஒக்டோபர் 7 ஆம் நாள் ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்குப் பின்னர் போர் நிறுத்தம் என்பதை ஒப்புக்கொள்ள இயலாது. இந்தப் போரில் வெற்றிபெறும் வரை இஸ்ரேல் போராடும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், தெற்கு காசா பகுதியில் உள்ள கான் யூனிஸ் நகரத்தில் இன்று 93 பேர் பலியாகியுள்ளனர்.

ஒக்டோபர் 7 முதல் காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 8 ஆயிரத்து 306 பேர் கொல்லப்பட்டனர். இதில் 3 ஆயிரத்து 457 குழந்தைகள், 2 ஆயிரத்து 136 பெண்கள் மற்றும் 480 முதியவர்கள் அடங்குகின்றனர்.

மேலும், 21 ஆயிரத்து 48 பேர் காயமடைந்துள்ளனர். 1,050 குழந்தைகள் உட்பட 1,950 பேரை காணவில்லை. தண்ணீர் பற்றாக்குறையால், தண்ணீர் மூலம் பரவும் நோய்கள் மற்றும் தோல் நோய்கள் பரவலாக காணப்படுகின்றன எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதேவேளை, ஹமாஸ் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலில் 1400 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹமாஸால் கடத்தப்பட்ட ஜேர்மன் பெண் மரணம்!



ஹமாஸால் கடத்தப்பட்டு ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்ட ஜேர்மன் பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட் டுள்ளது.

ஜேர்மன் பெண் ஷானி லூக்கின் மரணத்தை இஸ்ரேல் உறுதி செய்துள்ளது. அந்த பெண்ணின் உடலை இராணுவம் கண்டுபிடித்ததை ஷானியின் குடும்பத்தினரும் உறுதி செய்துள்ளனர்.

ஷானியின் மரணச் செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமாக இருக்கிறோம் என அந்தப் பெண்ணின் சகோதரி அட்டி லூக் சமூக ஊடகங்களில் எழுதியுள்ளார்.

ஒக்டோபர் 7 ஆம் திகதி, 23 வயதான ஷானி லூக் இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸால் பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்டார். அப்பெண்ணை நிர்வாணமாக்கி லொறியில் ஏற்றிச் செல்லும் காட்சிகள் வெளியாகின.

ஷானி லூக் ஒரு இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது ஹமாஸ் அமைப்பினரால் தாக்கப்பட்டார். இந்த பெண் கொல்லப்பட்டுள்ளார் என முன்னர் செய்திகள் வெளிவந்தன. ஆனால் இஸ்ரேல் இதை உறுதிப்படுத்தவில்லை.

இதற்கிடையில், ஷானியின் கிரெடிட் கார்டு காஸாவில் பயன்படுத்தப்பட்டது என அவரது வங்கியில் இருந்து தகவல் கிடைத்துள்ளது. அது அவரிடமிருந்து திருடப்பட்டிருக்கலாம் என்றும் ஷானியின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு சில நாட்களுக்குப் பின்னர், ஷானி லூக்கின் தாய் தனது மகள் உயிருடன் இருக்கிறார் என நம்புகிறேன் என கூறியிருந்தார்.

அவரது தாயார் ரிகார்டா லூக், காசா பகுதியில் உள்ள ஒரு குடும்ப நண்பர் தனது மகள் ஹமாஸ் மருத்துவமனையில் உயிருடன் இருக்கிறார் என தன்னிடம் தெரிவித்தார் எனவும் அவரை மீட்க ஜேர்மன் அரசாங்கம் விரைவாகச் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில், இஸ்ரேல் ராணுவ வீரர்கள் அண்மையில் மண்டை ஓடு ஒன்றை கண்டெடுத்தனர். அதனை மரபணு பரிசோதனை செய்தபோது அது ஷானியின் மண்டை ஓடு என்பது தெரியவந்துள்ளது. இதைத் தொடர்ந்து ஷானி லூக் உயிரோடு இல்லை என்று இஸ்ரேல் இராணுவம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இந்த தகவலை ஷானியின் உறவினர்களும் உறுதி செய்துள்ளனர். ஷானி லவுக்கின் தாய் ரிகார்டா கூறும்போது, எனது மகள் ஷானி உயிரிழந்துவிட்டார் என இஸ்ரேல் வெளியுறவுத்துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர். இது மிகவும் துயரமான செய்தி. அவளது இழப்பை தாங்கிக் கொள்ள முடியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

உறவினர்கள் கூறும்போது, ஷானி உயிரிழந்திருப்பது உறுதியாகி உள்ளது. அவரது ஆண் நண்பரை காணவில்லை. அவர் ஹமாஸ் அமைப்பினரிடம் சிக்கி இருக்கலாம் என்று தெரிவித்துள்ளனர்.